## பகுதி 1

**① அடைப்புகுறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமனாதைத் தெரிந்து கீறிட்டஇடங்களில் எழுதுக.**

1. தமிழ் நெடுங்கணக்கு________________________எழுத்துகளைக் கொண்டது.
   (247, 230, 216)
2. பால் +குடம் என்பதைச் சேர்த்து எழுதினால் ____________________ என வரும்.

   (பாற்குடம்,பால்குடம். பால்க்குடம்)
3. நேற்று நான் வெளியே விளையாடச் ______________________________
   (செல்கின்றேன், சென்றேன், செல்வேன்)
4. கணிகன் என்பவன் ____________________________________
   (சோதிடன், வணிகன், பலவன்)
5. மலையும் மலைசார்ந்த இடமும் _______________________________
   (மருதம், முல்லை, குறிஞ்சி)
6. தேனின் சுவை ___________________________________
   (இனிப்பு, தித்திப்பு, உறைப்பு)
7. சிரித்தான் என்பது_________________________________
   (எதிர்காலம், இறந்தகாலம், நிகழ்காலம்)
8. பொருட்களை இன்னொரு நாட்டுக்கு அனுப்புவது______________________
   (இறக்குமதி, ஏற்றுமதி, வருமதி)
9. ஒலிம்பிக் கொடியில் _______________________ வளையங்கள் உள்ளன.
   (ஆறு, ஐந்து, நான்கு)
10. தாய் மண்ணிற்காக தம் உயிரை அர்ப்பணித்தவர்களுக்கு எழுப்பப்படும் கல்________________________________
    (கருங்கல், நடுகல், சுண்ணாம்புக்கல்)
11. அன்பினால் விளைவது______________________________
    (பகை, நட்பு, தீமை)

12. நாம் நமது உடலுக்கு ஏற்ற உணவை________________________ உண்ண வேண்டும்.
(அளவின்றி, அறியாமல், அறிந்து)

13. ஒற்றையடிப் பாதையில் மாட்டுவண்டி_______________________என ஓடியது.
(படபட, கடகட, சுடசட)

14. ஆடற்கலை பற்றி விரிவாகச் சொல்லும் தமிழ் நூல் _________________.
(திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம்)

15. நிலத்திலும் நீரிலும் வாழக்கூடிய உயிரி_____________________எனப்படும்.
(சிற்றுயிரி, நீருயிரி, ஈருடக உயிரி)

16. அதிகாலைப் பொழுது_________________________________ எனப்படும்.
(பின்னிரவு, வைகறை, பகல்)

17. நோன்பு என்பது உண்ணாமை விரதம் என்பது________________________
(தின்னாமை, வில்லாமை, கொல்லாமை)

18. கண்பார்வை இழந்தவரும் கண்டு உணரும் விந்தைக்கலை ________________________.
( சிற்பக்கலை, ஓவியக்கலை, ஆடற்கலை)

19. வானொலியை____________________________ கண்டுபிடித்தவர்.
(மோர்சு, கிரகம்பெல், மார்க்கோனி)

20. காளைகள் _______________________ சிங்கத்தை வென்றன.
(ஓடியதால், பிரிந்ததால், ஒற்றுமையால்)

21. போருடன் தொடர்புடைய விளையாட்டு ஒன்று________________________
(துடுப்பாட்டம், காற்பந்தாட்டம், சடுகுடு)

22. சேர சோழ பாண்டியரை ஒரு சொல்லில் _______________________ என்று அழைக்கலாம்.
(மூவேந்தன், வேந்தர், மன்னன்)

23. ________________________ ஒத்துவாழ்.
(தேரோடு, நாடோடு, ஊரோடு)

24. பாரியின் அரசவைப் புலவர் ____________________________
(கபிலர், தேவர், அறிஞர்)

25. தன் இனத்தை அணைத்து வாழும் பறவை ____________________
(கிளி, புறா, காகம்)

26. ____________________ பிறந்தால் வழி பிறக்கும்.
(மாசி, தை, சித்திரை)

27. இடுக்கண் என்பதன் எதிர்ச்சொல் ____________________
(மகிழ்ச்சி, ஆரவாரம், துன்பம்)

28. மன்னர்களுக்காக ஆடப்படுவது ____________________ எனப்படும்.
(பொதுவியல், வேத்தியல், இசையியல்)

29. ____________________ முத்துக் குளிக்கும் இடம்.
(சிலாபம், புத்தளம், காலி)

30. கொடையில் சிறந்தவனை____________________ என அழைப்பர்.
(கோழை, வள்ளல், கஞ்சன்)

(30புள்ளிகள்)

**② கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தரப்பட்ட சொற்களிலிருந்து தெரிந்து எழுதுவோம்.**

| கமழும் | மலர்கள் | காந்தள் | தாய்மண்ணின் | கார்த்திகைப்பூ |
|---|---|---|---|---|

மக்களின் மனத்தைக் கவர்பவை மலர்கள். வண்ண நிறங்களின் அழகாலும் ____________________ நறுமணத்தாலும் மனத்திற்கு மகிழ்வு ஊட்டுபவை ____________________. மக்கள் மனமகிழ்விற்காக மலர்த் தோட்டங்களை அமைத்துப் பேணுவர். நாட்டுக்கு நாடு வெவ்வேறு மலர்கள் சிறப்புப் பெறுகின்றன. அவ்வகையில் எமது ____________________ சிறப்பிற்குரிய பூ கார்த்திகைப்பூ ஆகும். கார்த்திகைப் பூவை இலக்கியங்கள் ____________________ என்று கூறுகின்றன. இப்பூ கார்த்திகைத் திங்களில் பூப்பதால் ____________________ என்ற பெயரைப்பெற்றது.

(05 புள்ளிகள்)

**③ தரப்பட்ட பாடநூல் வினாக்களுக்குப் பொருத்தமான முழுவிடை தருக.**

1. இரவில் கூடும் அங்காடியின் பெயர் என்ன?

2. ஈருடக உயிரிகள் 2 தருக?

3. சடுகுடு விளையாட்டு எதனுடன் தொடர்புடையது?

4. கார்த்திகைப் பூவிற்கு உரிய வேறொரு பெயர் ஒன்று தருக?

5. நானிலங்கள் எவை?

6. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

7. தைப்பொங்கலன்று சிறந்து நிற்கும் பண்பாடு எது?

8. பாரியின் மகள்மாரின் பெயர்கள் எவை?

9. யாருக்காக நடுகல் நாட்டப்படுகிறது?

______________________________

______________________________

10. தமிழர் புத்தாண்டு எப்பொழுது கொண்டாடப்படுகிறது?

______________________________

______________________________

(10 புள்ளிகள்)

**④ தரப்பட்டுள்ள சொற்களின் எழுத்து ஒலி வேறுபாட்டை அறிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| பலம் | காளை | பள்ளம் | கழகம் | பழம் |
|---|---|---|---|---|

1. தமிழ்க் கல்வி______________ தமிழ் கற்பிக்கிறது.
2. மாதுளை நல்ல சுவையுள்ள சத்துள்ள______________ .
3. யானை மிக்க______________ உடைய விலங்கு.
4. போரினால் வீதி மேடு______________ ஆகக் கடந்தது.
5. உழவுக்கு ______________ மாடு பயன்படுகின்றது.

(05 புள்ளிகள்)

**⑤ பாடலைப் படித்து கீழே உள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
பொது உடைமைக் கொள்கை திசைஎட்டும் சேர்ப்போம்
புனிதமோடு அதை எங்கள் உயிர் என்று காப்போம்
இதயம் எல்லாம் அன்பு நதியினில் நனைப்போம்
இது எனது என்னும் ஓர் கொடுமையை தவிர்ப்போம்.

1. நாம் எதை வேரோடு சாய்க்க வேண்டும்?

______________________________________________

______________________________________________

2. நாம் எதைத் தவிர்க்க வேண்டும்?

______________________________________________

______________________________________________

3. எதை நாம் அன்பு நதியினில் நனைக்க வேண்டும்?

______________________________________________

______________________________________________

4. திசை எட்டும் சேர்க்க வேண்டியது எது?

______________________________________________

______________________________________________

5. நாம் எப்படியான உலகம் செய்ய வேண்டும்?

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

## ⑥ கீழே காணும் பகுதியைப் படித்து வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

ஓர் ஆற்றங்கரையில் பெரியமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தடியில் ஒரு புறாவும் கட்டெறும்பும் நண்பர்களாக வசித்து வந்தன. இரு நண்பர்களும் ஒரு நாள் மரத்திலிருந்து கதைத்துக் கொண்டிருந்தன. அப்பொழுது கட்டெறும்பு தவறி ஆற்றுக்குள் விழுந்துவிட்டது. தன்னைக் காப்பாற்றும்படி புறாவிடம் கேட்டது. புறாவும் என்ன செய்வது என்று அறியாது தவித்தது; வேதனைப்பட்டது.
புறா மரத்திலிருந்து ஒரு குச்சியைத் தன் வாயால் பிடுங்கி தன் நண்பனாகிய எறும்புக்கு அருகில் போட்டது. பின்பு புறா எறும்பை நோக்கி “நண்பரே நான் ஒரு குச்சியை நீருக்குள் போட்டுள்ளேன், அதன் மேல் ஏறி ஆற்றங்கரைக்கு வா” என்று கூறியது. எறும்பும் அவ்வாறே செய்தது. தப்பினேன் பிழைத்தேன் என்றவாறு எறும்பு கரையை அடைந்தது. தன் நண்பனாகிய புறாவுக்கு நன்றி கூறியது.
சில நாட்களின் பின் புறா அந்த மரத்தில் அமர்ந்திருந்தது. அதை ஒரு வேடன் கண்டான். எப்படியும் இப்புறாவைக் கொல்லவேண்டும் என்று அம்பை எடுத்து புறாவை நோக்கி எய்தான். அதேவேளை அவ்வழியில் வந்து கொண்டிருந்த எறும்பு இதைக் கண்டது. தன் நண்பனாகிய புறாவைக் கொலைசெய்ய எண்ணிய வேடனைக் கண்டு ஓடிச்சென்று அவனது காலில் கடித்தது. வேடன் வலியால் அலறித் துடித்தான். புறா தன்னைக் காப்பாற்றியதற்காக நன்றி கூறியது. இரண்டும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன.

1. புறாவும் எறும்பும் எங்கே வசித்து வந்தன?

______________________________

______________________________

2. எறும்புக்கு என்ன நடந்தது?

______________________________

______________________________

3. எறும்பைக் காப்பாற்ற புறா என்ன தந்திரம் செய்தது?

______________________________

______________________________

4. புறாவைக் காப்பாற்ற எறும்பு என்ன செய்தது?

______________________________

______________________________

5. தரப்பட்டுள்ள பந்தியில் இக்கதை எதை உணர்த்தி நிற்கிறது?

______________________________

______________________________

(10 புள்ளிகள்)

**⑦ கீழே தரப்பட்டுள்ள வாழிட மொழிச் சொல்லியங்களை உமது தாய் மொழியில் எழுதுக.**

1. நான் வகுப்புக்குள் வரும் பொழுது மணி அடித்தது.

______________________________________________

______________________________________________

2. நானும் எனது அம்மாவும் அங்காடிக்குச் சென்றோம்.

______________________________________________

______________________________________________

3. நாம் உணவு உண்ணும் பொழுது அதிக பழங்களையும் காய்கறிகளையும் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

______________________________________________

______________________________________________

4. அவர்கள் நேற்று பூங்காவிற்குச் சென்றார்கள்.

______________________________________________

______________________________________________

5. சேரனும் மாறனும் நண்பர்கள்.

______________________________________________

______________________________________________

(10புள்ளிகள்)

**⑧ பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப் பற்றி 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. **தைப்பொங்கல்**

   தமிழர் திருநாள்
   தை முதல்நாள்
   கீழ்வானம் வெளுத்தல்
   கோலமிடல்
   நிறைகுடம்
   பொங்கல் படைத்தல்
   கூடியுண்ணல்

2. **நானிலங்கள்**

   வகைப்படுத்திய அடிப்படை
   நிலப்பிரிவுகள்
   வாழ்ந்த முறைகள்

3. **இளங்கோவடிகள்**

   பிறப்பு
   துறவு
   சிலப்பதிகாரத்தின் பெருமை
   சிறப்பு

(20 புள்ளிகள்)